**யாழ்ப்பாணம்-பருத்தித்துறை வீதி , புத்தூர் - மீசாலை வீதி , யாழ்ப்பாணம் - காங்கேசன்துறை வீதி மற்றும் யாழ்ப்பாணம் - பலாலி வீதிகளின் 84 கிலோமீற்றர்கள் நீள வடக்கு வீதி புனரமைப்பிற்கான செயற்திட்டம் 2014**

---

யாழ்ப்பாணம் - பருத்தித்துறை வீதி , புத்தூர் - மீசாலை வீதி , யாழ்ப்பாணம் - காங்கேசன்துறை வீதி மற்றும் யாழ்ப்பாணம்- பலாலி வீதிகளின் 84 கிலோமீற்றர்கள் நீள வீதி புனரமைப்பிற்கான செயற்திட்டத்தின் 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் சீன ஏற்றுமதி இறக்குமதி வங்கிக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2010 செப்தெமபர் 09 ஆந் திகதிய பீஎல்ஏ- 201004 ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் பிரகாரம் இச் செயற்திட்டம் அமுலாக்கப்படுகின்றது.

## 1.2 செயற்திட்டத்தின் நிறைவேற்றல், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி என்பன

---

செயற்திட்டத்தின் கடன் உடன்படிக்கையின்படி, முன்னாள் துறைமுகங்கள் மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சும் தற்போதைய உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் வீதி அபிவிருத்தி அதிகாரசபை செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவராக உள்ளது. வீதி அபிவிருத்தி அதிகாரசபையானது தேசிய மட்டத்தில் செயற்திட்ட நடவடிக்கைகளை முகாமை செய்வதற்கும் ஒருங்கிணைப்பதற்கும் பொறுப்பாக உள்ளது. யாழ்ப்பாணம்-பருத்தித்துறை வீதி , புத்தூர்- மீசாலை வீதி , யாழ்ப்பாணம்- காங்கேசன்துறை வீதி மற்றும் யாழ்ப்பாணம்- பலாலி வீதிகளின் 84 கிலோமீற்றர்கள் நீள வீதியை புனரமைத்து முன்னேற்றுவதே செயற்திட்டத்தின் நோக்கமாக உள்ளது. கடன் உடன்படிக்கையின் படி, செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்த பெறுமதி ஐ.அ.டொலர் 88.7 மில்லியனாக உள்ளதுடன் அதில் ஐ.அ.டொலர் 75.4 மில்லியன் அல்லது 85 சதவீதம் சீன ஏற்றுமதி இறக்குமதி வங்கியால் நிதியளிப்பதற்கு உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டத்தின் பூர்வாங்க வேலைகள் 2010 திசெம்பர் 01 இல் தொடங்கப்பட்டிருந்ததுடன் ஒப்பந்தம் 2011 யூன் 09 இலிருந்து செயற்பாட்டிலிருந்தது. எவ்வாறெனினும் வீதிகளின் புனரமைப்பு வேலைகள் 2013 திசெம்பர் 08 இல் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டிருந்தது. வீதி வேலைகள் 2013 ஒக்தோபர் 01 இல் பூர்த்தியாக்கப்பட்டு வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு கையளிக்கப்பட்டிருந்தது. எனினும், 2014 திசெம்பர் 31 இற்கான செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.4 கணக்காய்வாளரின் பொறுப்பு

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு

கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கின்றாரேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்திற்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வுசெய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வுசெய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவத்தின் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள், முதலியவற்றின் நம்பகத்தன்மையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடன்வழங்கும் முகவர் என்பவற்றின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(இ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள் மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டுள்ளனவா என்பதும்,

(ஈ) செயற்திட்டத்தின் அமுல்படுத்தலுக்காகக் கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்

(உ) நிதிக்கூற்றுக்களானவை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஊ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

(எ) நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களிற்கு இணங்க தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1. அபிப்பிராயம்

எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமையவும், இந்த அறிக்கையின் பந்தி 2.2 இல் குறிப்பிடப்பட்ட விடயங்களிலிருந்து எழுகின்ற சீராக்கல்களின் தாக்கங்களைத் தவிர்த்தும்,

(அ) செயற்திட்டமானது 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான முறையான கணக்கேடுகளைப் பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) வழங்கப்பட்ட நிதிகள் அவை வழங்கப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும்,

(ஈ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிக் கட்டுப்பாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும், நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட பின்வரும் இணங்காமை சந்தர்ப்பங்கள் மீளாய்வாண்டின் போதும் பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்கப்படாமல் காணப்பட்டன.

(அ) அரசாங்க கொள்வனவு வழிகாட்டிலின் 5.4.4 ஆம் பிரிவுக்கு முரணாக ரூபா 882.65 மில்லியன் கூட்டுத் தொகையான நிகழத்தக்கவைக்கான ஏற்பாட்டு தொகை மற்றும் ஒதுக்கீடுகள் உள்ளடங்கலாக மொத்த ஒப்பந்த பெறுமதியின் 30 சதவீதமான ரூபா 3055.5 மில்லியன் தொகையான ஆரம்ப முற்பணங்களின் கொடுப்பனவு உள்ளடக்கப்பட்டிருந்தது.

(ஆ) 2003 யூன் 02 ஆந் திகதிய பொது முயற்சிகள் திணைக்களத்தின் பிஈடி/12 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 8.3.9 மற்றும் 8.6 ஆம் பிரிவுகளிற்கு முரணாக செயற்திட்டத்திற்கு இணைக்கப்பட்ட வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் ஊழியர்களுக்கு ரூபா 111,344 தொகையான மருத்துவ காசாக்கலிற்கான மிகையூதியங்கள் மற்றும் படிகள் செலுத்தப்பட்டிருந்தது.

(இ) முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் 2007 ஏப்ரல் 05 ஆந் திகதிய 33 ஆம் இலக்க சுற்றறிக்கைக்கு முரணாக, செயற்திட்டத்திற்கு இணைக்கப்பட்ட வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் ஊழியர்களின் வேதனங்கள் வீதி அபிவிருத்தி அதிகாரசபையால் அறிமுகப்படுத்தப்பட்ட சூத்திரத்தின் அடிப்படையில் கணிப்பிடப்பட்டிருந்தது. இது தொடர்பில், 2013 திசெம்பர் 31 வரை முறையான அதிகாரம் பெற்றுக்கொள்ளாமல் ரூபா 12.81 மில்லியன் தொகையான மிகையூதியம் செலுத்தப்பட்டிருந்தது.

### 2.2.2 இணக்கம் செய்யப்படாத மீதிகள்

நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின்போது பெறப்பட்ட கடன் பெறுகைகள் ரூபா 2805.6 மில்லியனாகவுள்ளது. அதேநேரம் வெளிநாட்டு வளத் திணைக்களத்தால் தயாரிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் செயற்பாட்டு கண்காணிப்பு பிரிவால் தயாரிக்கப்பட்ட பொழிப்பு அறிக்கைகளில் ரூபா 2,318,43 மில்லியன் நேரொத்த மீதி காட்டப்பட்டிருந்தது, ரூபா 487.17 வித்தியாசம் இணக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை.

## 3. நிதிசார் மற்றும் பௌதீக செயலாற்றல்

### 3.1 நிதிகளின் பயன்பாடு

கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், மீளாய்வாண்டின் போதும் 2014 திசெம்பர் 31 வரையும் செயற்திட்டத்தின் நிதியளிப்பு மற்றும் நிதிகளின் பயன்பாடு தொடர்பான சில முக்கிய புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்படுகின்றன.

| மூலம் | கடன் உடன்படிக்கையில் நிதியளிக் வேண்டுமென உடன்பட்ட தொகை | | பயன்படுத்திய நிதிகள் | | |
|---|---|---|---|---|---|
| | | | 2014 ஆண்டின் போது | 2014 திசெம்பர் 31 வரை | |
| | ஐ.அ.டொலர் மில் | ரூபா மில் | ரூபா மில் | ஐ.அ.டொலர் மில் | ரூபா மில் |
| சீன ஏற்றுமதி-இறக்குமதி வங்கி | 75.40 | 10,185.00 | 2,805.63 | 74.75 | 9,281.87 |
| இலங்கை அரசாங்கம் | 13.30 | 1,968.75 | 44.82 | 14.60 | 1,905.55 |
| | **88.70** | **12,153.75** | **2,850.45** | **89.35** | **11,187.42** |

**3.2 பௌதீக செயலாற்றல்**

கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், வீதிகளின் புனரமைப்பு மற்றும் மீள்நிர்மாணம் பகுதியளவில் பூர்த்தியாக்கப்பட்டு புனரமைக்கப்பட்ட வீதிகள் 2013 ஒக்தோபர் 01 இல் வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு கையளிக்கப்பட்டிருந்தது.

**3.3 ஒப்பந்த நிர்வாகம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஆலோசனையாளரின் தர பரீட்சிப்பு அறிக்கைகளின் பிரகாரம் 04 வீதிகளில் இழைக்கப்பட்ட அல்பலற் வேண்டப்பட்ட தரத்தை அடைவதற்கான தொழில்நுட்ப குறிப்புக்களுடன் இணங்கியிருக்கவில்லை. அதன் விளைவால், ஒப்பந்தக்காரர்களால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளிலிருந்து ரூபா 323.04 மில்லியன் தொகை கழிக்கப்பட்டிருந்தது. ஆலோசனையாளரின் அறிவுறுத்தல்களின் பிரகாரம், தொழில்நுட்ப குறிப்புரைகளில் குறிப்பிடப்பட்ட அழுத்தத்தின் அளவு 96 சதவீதத்திலிருந்து 92 சதம் வரை குறைக்கப்பட்டதுடன், ரூபா 61.84 மில்லியன் கழிப்பனவுகள் ஒப்பந்தக்காராகளுக்கு மீளசெலுத்தப்பட்டிருந்தது. ஆலோசனை உடன்படிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம், தொழிலாளர்கள் பொறிறியலாளருக்கு எழுத்து மூலமாக குறிப்புரைகளை மாற்றுவது தொடர்பாக தீர்மானம் வழங்காதபட்சத்தில் ஆலோசனையாளர் அதற்கு அனுமதிக்கப்படமாட்டார் எனினும், குறிப்புரைகளை மாற்றியமை மற்றும் மீள் கொடுப்பனவுகளை அங்கீகரித்தமை தொடர்பில் ஆலோசனையாளர்களிடமிருந்து விளக்கங்களை கோருவதற்கு செயற்திட்டத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கிடைக்கப் பெற்ற தகவல்களின் பிரகாரம், சிவில் வேலைகளின் பூர்த்தியாக்கலில் ரூபா 3,484 மில்லியன் பெறுமதியான மேலதிக வேலைகள் மற்றும் ரூபா 2,053 மில்லியன் சேமிப்புக்கள் அறிக்கையிடப்பட்டிருந்தது. 4 வீதிகளின் இரு மருங்கிலும் 723 வீதி விளக்குகளின் ஸ்தாபிப்பு தொடர்பான வேலைகள் அளவீட்டுப்பட்டியலில் உள்ளடக்கப்பட்டிருந்தபோதும் வீதி விளக்குகளிற்கான கேபிள் ஸ்தாபிப்பு மற்றும் வீதிவிளக்குகளுக்கான மின் வழங்கல் நிராகரிக்கப்பட்டிருந்தது. ஆகையால், ரூபா 41.90 மில்லியன் முரண்பாடு கட்டளைகளை அனுமதிக்க வேண்டி ஏற்பட்டிருந்தது. அதன் மூலம் செயற்திட்டத்தால் முறையான நில ஆய்வுகள் மேற்கொள்ளப்படாமலும் உண்மையான தேவைப்பாடுகளையும் பெற்றுக்கொள்ளாமல் அளவிட்டுப் பத்திரம் தயாரிக்கப்பட்டிருந்தமை வெளிப்படுத்தப்பட்டது.

**3.4 சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பூர்த்தியாக்கல் கூற்றில் பிரகாரம், சொத்துக்களை இடித்தகற்றல் மற்றும் மீள கட்டியெழுப்பல் நோக்கத்திற்கு ரூபா 15 மில்லியன் தொகையான ஏற்பாட்டு ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் ரூபா 515.46 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்தது. மேலும், ஒப்பந்தக்காரர்கள் இடித்தகற்றல் மற்றும் மீளகட்டியெழுப்பல் நடவடிக்கைகளில் நேரடியாக ஈடுபடவில்லையென்றும் மூன்றாம் தரப்பினருக்கு கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது எனவும் அவதானிக்கப்பட்டது. எவ்வாறெனினும், கொடுப்பனவு விபரங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பின்வரும் நடவடிக்கைகள் செயற்திட்டத்தின் பிரதான நோக்கெல்லையுடன் நேரடியாக தொடர்புபடாத போதும் அத்தகைய நடவடிக்கைகள் முரண்பாட்டு கட்டளைகளினூடாக செயற்திட்டத்தால் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

| விபரம் | செலவிடப்பட்ட தொகை |
|---|---|
| | ரூபா. மில்லியன் |
| யாழ்ப்பாண கோட்டை மற்றும் துரையப்பா அரங்குகளிற்கான நுழைவு வீதிகளின் நிர்மாணம் | 39.49 |
| யாழ்ப்பாணத்தில் வைத்தியசாலை வீதியில் சமிக்ஞை விளக்குகளிற்கான முறைமை | 5.32 |
| கிளிநொச்சி நகரத்தின் விசேட வேலைகள் | 63.38 |